விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 பங்குனி 26 செவ்வாய்க்கிழமை (09.04.2002) தொலைபேசி 3378 ஒலி 111

O/L DAY CLASS
ஏப்ரல் 10இல்
ஆரம்பம்
பெயர் பதிவுகள்
ஏற்கப்படுகின்றன.




நேற்று யாழ் வருகை தந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் நல்லூரில் அமைக்கப்பட்ட மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், முகமாலைப் பகுதியில் இராணுவத்தின் தடையையும் மீறி கண்டி வீதியால் வன்னி செல்ல முழற்சிக்கும் மக்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## ஏ-9 பாதை நேற்றுத் திறப்பு

# யாழ் வந்த விடுதலைப் புலிகளுக்கு

# மக்கள் திரண்டு எழுந்து வரவேற்பு

## வரலாறு காணாத பாசப்பிணைப்பு பார்ப்போரை நெகிழ வைத்தது

(முகமாலையில் இருந்து நமது நிருபர்)

கடந்த 13ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த குடாநாட்டுக்கான ஏ.9கண்டி வீதி நேற்றுக்காலை பயணிகள் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதை அடுத்து ஏழு ஆண்டுகளின் பின் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் இப்பாதையூடாக நேற்று யாழ்ப்பாணம் வந்தபோது குடாநாட்டு மக்கள் திரண்டு அமோக வரவேற்பளித்தார்கள்.

இந்த வரவேற்பை அடுத்து விடுதலைப்புலிகள் முக்கி

## யாழ்ப்பாணத்திற்கு வந்த
## விடுதலைப் புலிகளின் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து யாழ் கண்டி வீதியூடாக நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் 18 உறுப்பினர்கள் வந்துள்ளனர்.

தளபதி இளம்பரிதி தலைமையில் வருகைதந்த புலிப்

பெயர் விபரம் வருமாறு:
- இளம்பரிதி
- பாப்பா
- அருணன்
- செந்தமிழ்
- குமரகன்
- பல்லவன்

இந்த வரவேற்பை அடுத்து விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர்கள் மங்களவாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக நல்லூருக்கு அழைத்து வரப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான ஏ.9 கண்டி வீதியில் இராணுவத்தினரால் போடப்பட்டிருந்த பாரிய மண் அரண் அப்புறப்படுத்தப்பட்டு இராணுவப் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் நேற்றுக் காலை 11.18மணிக்கு பலாலி இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் லால் வீரசூரியா திறந்த வைத்தார்.

நேற்றுத்திறந்து விடப்பட்ட பாதை ஊடாக நண்பகல் 12.15 மணியளவில் இரண்டு பெண் போராளிகள் உள்ளிட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்கள் புலிக்கொடியைத் தாங்கிய வண்ணம் றோசா ரக மினிபஸ் மூலம் முகமாலைப் பகுதியில் வந்திறங்கினர்.

(8ம் பக்கம் பார்க்க)

மையில் வருகைதந்த புலிப் போராளிகளில் இருவர் பெண் புலி உறுப்பினர்களாவர்.

வருகைதந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களின்

- ❖ பல்லவன்
- ❖ இலக்கியன்
- ❖ மதி
- ❖ அன்பரசன்

(8ம் பக்கம் பார்க்க)

## நடைமுறைச் சிக்கலால்
# பாதை திறக்கப்பட்ட போதும் பயணம் காலதாமதமாகியது

(முகமாலையில் இருந்து நமது நிருபர்)

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான ஏ9 கண்டி வீதி நேற்றுக்காலை 11மணி 18நிமிடம் வரையிலான சுபமுகூர்த்த வேளையில் பலாலி படைத்தளபதி மேஜர் ஜெனரல் லால் வீரசூரியாவினால் திறந்து வைக்கப்பட்ட போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட சில விடயங்களில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக ஒரு மணித்தியாலம் வரை பயணம் தடைப்பட்டிருந்தது இதனையடுத்து விடுதலைப் புலிகளின் பகுதியில் இருந்து அவர்கள் வருவது காலதாமதமாகியது.

(வ)

# செம்மணிப் பாதையால் வரும் போது எம் உறவுகளை எண்ணிக் கலங்கினோம்
## புலிகளின் தளபதி பாப்பா உணர்ச்சி மிகு பேச்சு

(நல்லூர்)

இரண்டு நாட்டு இராணுவம் செய்து கொள்ளும் ஒப்பந்தம் போல இன்று நாங்களும் அரசாங்கமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளோம். இந் நிலைமை ஏற்படக் காரணம் நாங்கள் இன்று பலம் பொருந்திய ஒரு இராணுவமாக உள்ளமையே ஆகும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி பாப்பா தெரிவித்துள்ளார். நேற்று நல்லூரில் நடைபெற்ற விடுதலைப்புலிகளை வரவேற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எங்களையும் மக்களாகிய உங்களையும் எவராலும் பிரிக்க முடியாது நாம் தொப்புள் கொடி உறவால் ஒன்று பட்டவர்கள். இத்தகைய ஒன்றுபட்ட நிலையால் நாம் இன்று ஒரு மாபெரும் சக்தியாக வளர்ந்து விட்டோம். எம்மை மக்கள் மிகவும் உற்சாகமாக வரவேற்றமை உண்மையிலேயே ஒரு வியத்தகு நிகழ்வாகவே அமைந்திருந்தது.

(2ம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபன் கூறிய புரட்சியை மக்கள் வெள்ளத்தில் காண்கிறோம்
## இளம்பரிதி எழுச்சி உரை

(நல்லூர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இன்று மக்கள் பலம் பொருந்திய மாபெரும் சக்தியாக விளங்குகின்றனர். பலம்பொருந்திய விடுதலை அமைப்பான நாம் என்றுமே சமாதானத்துக்கு எதிரானவர்கள் அல்லர். சமாதானத்தின் முக்கியத்துவத்தையே எமது தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் தனது மாவீரர்தின உரையில் உறுதிப்படக் கூறிவருகிறார்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின்

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சிறு விளம்பரம்

## தமிழ் மூலம் ஆங்கிலம்

ஆங்கில மொழியை மிக இலகுவில் கற்றிடலாம் எழுத, பேச (Fluently Speaking) வாசிக்க சிறந்த தேர்ச்சி பெறுங்கள். இது இலகுநடைட. சுயமாக கற்றிடும் கற்கை நெறி, SELE STUDY COURSE மேலதிக விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்க. K. N. R. 39, கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

(4942)


# இராசி பலன்

9.4 2002
பங்குனி 26, செவ்வாய்
துவாதசி மு. இ. 7.43வரை
சதயம் மு. இ. 8.16 வரை
ராகுகாலம் 3.07 - 4.37
நல்லநேரம் - 10 37 - 12.07

**மேடம்**
பெரியோர் வரவேற்பு, காரிய அனுகூலம், தனலாபம், குடும்ப மகிழ்ச்சி.

**இடபம்**
கடின உழைப்பு, முயற்சி கைகூடும், நல்ல சம்பவம், அமைதிக் குறைவு.

**மிதுனம்**
உறவினர் சந்திப்பு, காரிய தாமதம், தொழில் நன்மை, வயிற்றுக் கோளாறு.

**கடகம்**
எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தடங்கல், விருந்துபசாரம், வியாதி.

**சிங்கம்**
பிரயாண சுகம், உறவினர் வருகை, வசியம், காரிய நன்மை.

**கன்னி**
ஆரோக்கியம், காரிய அனுகூலம், தொழில் விருத்தி, சுவாரஸ்யம்.

**துலாம்**
புத்திரரால் சோகம், இன சன வருகை, தொழில் நன்மை, கௌரவக் குறைவு.

**விருச்சிகம்**
தாய்வழி உறவு, காரிய ஜெயம், உடல் நலக்குறைவு, கல்விச் சிறப்பு.

**தனுசு**
குடும்ப மகிழ்ச்சி தனவரவு, பிரயாண சுகம், காரிய சித்தி.

**மகரம்**
உறவினர் உதவி, மாதர் நட்பு, பொருள் விரயம்.

# வினாவிடை போட்டிக்கான பரிசில் வழங்கல் இன்று

(வல்வெட்டித்துறை)

இலங்கைக் கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் யாழ்மாவட்ட கூடைப் பந்தாட்டச்சங்கம் நடத்திய 13வயதுக்குட்பட்ட பிரிவுக்கான வினாவிடைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் இன்றுமாலை 6மணிக்கு யாழ்பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற வுள்ளது.

மேற்படி போட்டிமுடிவுகள் வருமாறு;

முதலாம்இடம்- எஸ் பிரவாசினி கொக்குவில் இந்துக் கல்லூரி

இரண்டாம் இடம்- ஆர். தனுஷா வேம்படிமகளிர் உயர்தர பாடசாலை

மூன்றாம் இடம் எஸ். ரஞ்சனா கொக்குவில் இந்துக்கல்லூரி (உ-217)

# பாதுகாப்பு செய்தியில் புதிய நடைமுறை

(கொழும்பு)

இதுவரைகாலமும் தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுவந்த செய்தித் தொகுப்புகள் இனிமேல் சமாதானச்செயலகத்தின் தலைவர் பேர்னாட் குணரத்தினாவால் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் தகவல் திணைக்களத்தினால் வெளியிடப் படவுள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே யுத்தநிறுத்தம் ஏற்பட்டதை யடுத்து பாதுகாப்பு தொடர்பான செய்திகள் பிரிகேடியர் சனத் கருணாரட்ணாவின் நேரடிக்கண்காணிப்பில் தயாரித்து பாதுகாப்புசெய்தியாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவினால் அங்கீகரிக்கப்பட்டு தகவல் திணைக்களம் செய்தி ஊடகங்களுக்கு வழங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் சமாதானத்திற்கு குந்தகமாகவும், எதிர் விளைவுகளை தருவதுமான தகவல்கள் பரவுவதைக் கட்டுப்படுத்தலாமென்று அரசு கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது (வ)

# பாகிஸ்தான் விமானப்படை தளபதி இலங்கையில்

(கொழும்பு)

பாகிஸ்தான் விமானப்படைத்தளபதி எயர்மாஷல் அபிவீர் நேற்று முன்தினம் இலங்கைவந்துள்ளார்.

ஒருவாரகால விஜயத்தைமேற்கொண்டு இங்குவந்துள்ள இவர் முப்படைத்தளபதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதுடன் விமானப்படையின் முக்கிய தளங்களுக்குச்சென்று அவற்றையும்பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

(உ-8)

# தியாகி திலீபன் கூறிய...

வரலாறுகாணாத ஒரு இடப் பெயர்வாக 1995ம் ஆண்டுஇடப்பெயர்வு அமைந்திருந்தது இதனால் நீங்கள் அனுபவித்த துன்பம் கொஞ்சநஞ்சமல்ல.

குழந்தையைப்பிரிந்த தாய் கணவனைப்பிரிந்த மனைவி உறவுகளைப்பிரிந்த சொந்தங்கள் எனநீங்கள்பட்ட துன்பங்கள் எம்மை உண்மையிலேயே வேதனைஅடையச் செய்தது.

இத்தகைய துயரஇடப்பெயர்வின் போது உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு கிளாலி ஊடாகவன்னிசென்ற உங்கள் உறவுகள் அங்குபட்ட துன்பங்களையும் மறந்துவிட முடியாது.

கொடிய மலேரியாவுக்கு மத்தியில் எத்தனை துன்பங்

ரமசிங்க பிரபாகரன் சார்பாகவே தேர்தலில் போட்டியிடுகிறார். அவருக்கு வாக்களிக்க வேண்டாம் என இனவாதம் பேசினார்.

ஆனால் அதனையும் மீறி மக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்தனர் என்றால் அது சமாதானத்தின் மீதுள்ள ஆர்வத்தினாலாகும்.

அந்த சமாதான சமிக்கையின் அடிப்படையிலேயே நாம் எங்கள் உறவுகளை பார்க்க இங்கு வந்துள்ளோம் உண்மையில் இன்று நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஏன் எனில் அன்று தியாகி திலீபன் கூறினார் 'எப்போது இம் மண்ணில் மக்கள் புரட்சி வெடிக்கிறதோ அன்றே சுதந்திர தமிழீழம் மலரும்' என்று அதனை

# பட்டப்பின்கல்விடிப்புளோமா பயிற்சி நெறிக்கு தெரிவானோர் விபரம்

(கொக்குவில்)

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி டிப்புளோமா பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப் பட்டோருக்கான ஆரம்ப வகுப்பு எதிர் வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சிரேஷ்டவிரிவுரையாளர் திருமதி ரி. வில்வநாதன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஆரம்பிக்கப்படும் இக்கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்விநிறுவக தொழில்சார் அபிவிருத்திப் பிரிவு செயற்திட்ட அதிகாரி திருமதி இராணி சிதம்பரநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

இப்பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு

ஆர். சத்தியானந்ததேவி ஆனைக்கோட்டை ஆர். சி. ரி. எம், எஸ், ஆர். திலகவதி ஆவரங்கால் மகாஜனாக் கல்லூரி, எஸ். இலக்குமிகரன் கைதடி மத்தி குமாரசாமி வித்தியாலயம், எஸ். பத்மநாதன் வலயக் கல்விப் பணிமனை சாவகச்சேரி, எம். பரமேஸ்வரன் நாவற்குழி மகா வித்தியாலயம், கே. சிவஞானம் நாவாந்துறை ஆர்.சி.ரி.எம்.எஸ், பீ. ஆரூரன் வேலணை சேர் துரைச்சாமி ம. ம. வித்தியாலயம். ரி. மகிழாம்பிகை சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம், ரி. சந்திரகுமார் யாழ். மத்திய கல்லூரி, ரி. சிறிதரன் யாழ். மத்தியகல்லூரி, எஸ். கோபிநாத் மாதனை எம். எம். ரி. எஸ், வி. கமலேஸ்வரி கொடிகாமம் வித்தியாலயம், எஸ். செல்வராசா வரணி மகா வித்தியாலயம், டி. விமலன் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, ஜே. புத்திசிகாமணி கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலயம், பீ. தியாகலிங்கம் பாசையூர் சென் அன்ரனி ஆர். சி, என். ரவிக்குமார் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பி.கமலேஸ்வரி சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், எம். கிருபாலினி வீரசிங்கம் ம. வித்தியாலயம், எம். சேரழகன் வசாவிளான் ம. வித்தியாலயம், எஸ்.மோகனகிருஷ்ணன் இடைக்காடு ம. வித்தியாலயம், கே. சிவசுப்பிரமணியம் நாகர்கோவில் எம். எம். ரி. எம். எஸ், எம். ஸ்ரீரங்கன் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், வை. ஜெகானந்தன் கொக்குவில் இந்துக்கல்லூரி, எம். பத்மா மானிப்பாய் மெமோறியல், எம். கலைவாணி பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம். (த-243)

## செம்மணி..,

இதனைக் கண்டு நாம் பெருமைப்படுகின்றோம். இம்மக்கள் சக்திஎம்முன்னால் நிற்கும்போது நாம் எதற்கும் அஞ்சமாட்டோம்.

செம்மணியைத் தாண்டி நாம் வரும்போது எமது கால்கள் கூசின. மனம் பதைபதைத்தது. உள்ளம் பொங்கி உருகி அழுதுவிட்டோம். அம்மண்ணில் உறங்குகின்ற எமது உறவுகள் சகோதரர்கள் மீது ஏறி வருவது போல் உணர்வு எம்மை பிழிந்தது.

அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்து புதைத்த இடத்தில் எமது கால்கள் பட்டபோது எமது உள்ளம் பதைத்தது.

நாம் ஈட்டிய வெற்றிகள் சாதனைகளை எண்ணிப் பார்க்கும் போது, அவை எத்தனை தியாகங்கள் அர்ப்பணிப்புகளுக்கு மத்தியில் ஈட்டப்பட்டன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

இதேமேடையில் 12 நாட்

## மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி

(தென்மராட்சி)

யாழ் குடாநாட்டில் அரசியல் பிரசார வேலைக்காக நேற்று ஏ-9 கண்டி வீதி முகமாலையூடாக யாழ்ப்பாணம் வத்திருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் தென்மராட்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தினர்இவ்வஞ்சலி நிகழ்வின் போது பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டனர், (வ)

## பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வலிவடக்கு சென்சிலுவைச் சங்கத்தினரும் தேசியஇளைஞர்சேவைமன்றமும் இணைந்துதமிழ்தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பயிற்சிநெறி ஒன்றினை நடத்தவுள்ளனர்.

பிரயாண சுகம், காரிய சித்தி.

## மகரம்

உறவினர் உதவி, மாதர் நட்பு, பொருள் விரயம், முயற்சி கைகூடும்.

## கும்பம்

பெரியோர் ஆதரவு, போசன சுகம், காரிய அனுகூலம், தெய்வசிந்தை.

## மீனம்

கற்பனை மிகுதி, காரிய அலைச்சல், பொருள் விரயம், திடீர் நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**


பிறக்கவிருக்கும் புதுவருடத்தை முன்னிட்டு

**★ நியூ சசி ரேயிலரிங் ★**

நிறுவனத்தினர்

தமது வாடிக்கையாளர் அன்பர்களுக்கு தமது சேவையை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மனமகிழ்வுடன் அறியத்தருகின்றனர்.

மானிப்பாய் வீதி, மருதனார்மடம்.

(4952)


துன்பங்களையும் மறந்துவிட முடியாது.

கொடிய மலேரியாவுக்கு மத்தியில் எத்தனை துன்பங்களை அனுபவித்தனர்.

இவற்றைநாம் மறந்துவிடவில்லை நிச்சயம் எங்கள் மக்கள் விரும்புகின்ற ஒருசுபீட்சமான தீர்வினையே நடைபெறப் போகும் பேச்சுவார்த்தை மூலம் அடையவேண்டுமென்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக உள்ளோம்.

சமாதானத்தினையே தென்பகுதி மக்களும் விரும்புகின்றனர். இதனையே நடைபெற்ற இருதேர்தல்களும் வெளிப்படுத்தி உள்ளன.

இனவாதம்பிடித்தசந்திரிகா அரசு தனது தேர்தல் பிரசாரத்தின் போது ரணில்விக்கி

'எப்போது இம் மண்ணில் மக்கள் புரட்சி வெடிக்கிறதோ அன்றே சுதந்திர தமிழீழம் மலரும்' என்று அதனை இங்கு குழுமியிருக்கும் மக்கள் வெள்ளம் உணர்த்தி நிற்கிறது.

எங்கள் தலைவர் அடிக்கடி கூறுவார் யாழ் மக்கள் தமது உரிமைகளை உலகுக்குவெளிக்காட்ட ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த் திருக்கின்றார்கள் என்று அதன் ஒருவெளிப்பாடே அன்று பொங்கி எழுந்த பொங்குதமிழ் நிகழ்வு

இப் பொங்குதமிழ் நிகழ்வு இன்று உலகெங்கும் நடைபெறுவது உண்மையிலேயே சந்தோசப்படவேண்டிய விடயம். இதனை ஏற்பாடுசெய்த ஏற்பாட்டாளர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

இங்கு ஒரு சிறிய சம்பவத்தை நினைவு படுத்தலாம் என்று நினைக்கிறேன் இதே நல்லூர் பகுதியில் அன்று இராணுவச் சுற்றிவளைப்பின் போது எமது போராளியொருவர் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைத்தார். அப்போது இதே பகுதியைச்சேர்ந்த 7 வயதுச் சிறுமி ஒருத்தி சுற்றிவளைப்பின் மத்தியிலும் கடைக்குச் சென்று குளுக்கோஸ் வாங்கி வந்து காயமடைந்த போராளிக்கு கொடுத்து உதவினார்

இந் நிகழ்வு உண்மையிலேயே எமதுமண் வீரம்

பணிப்புகளுக்கு மத்தியில் ஈட்டப்பட்டன என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

இதேமேடையில் 12 நாட்கள் நீராகாரம் எதுவுமின்றி தியாகி திலீபன் இந்தியப்படையின் ஆக்கிரமிப்பை எதிர்த்து உயிர் நீத்த தியாகம் எம் கண் முன் நிழலாடுகிறது.

யாழ் குடாவை ஆக்கிரமித்து இறுமாப்புடன் கொடி ஏற்றியவர் இன்று சிறையில் வாடுகிறார் எம்மைஒரு சிறுகுழு என்றுஏளனம் செய்தவர்கள் வியப்பில் உறைந்துவிட்டனர்.

எமது தலைவரின் இராணுவ மற்றும் அரசியல் காய்நகர்த்தலைக்கண்டு அகில உலகமே இன்று வியப்படைந்துள்ளதுடன் பல இராஜதந்திரிகளும் ஆரூடம் கூறுகின்றனர்.

எம்மண்ணில் வரலாறு காணாத பலவியத்தகு நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளது. தாயானவள் துணைப்படையில் இருந்து படை முகாமை வேவுபார்க்க மகன்கரும்புலியாகச்சென்று முகாமைத் தாக்கிய வரலாற்றுச் சான்று மிகு சம்பவங்கள் எமதுபோராட்ட வரலாற்றில் தான்

---

செறிந்தது என்பதையே காட்டி நிற்கிறது என்று இளம்பரிதி மேலும் தெரிவித்தார், (இ-10)

ஞர்சேவைமன்றமும் இணைந்துதமிழ்தட்டெழுத்து சுருக்கெழுத்துப் பயிற்சிநெறி ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் எதிர்வரும்15ம் திகதிக்கு முன்னர் மல்லாகத்தில் உள்ளசெஞ்சிலுவைச் சங்கப்பிரிவு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறுகேட்கப்பட்டுள்ளது. (வ)

---

இடம்பெற்றது.

இத்தகைய வெற்றிகள்போராட்ட இலக்குகள் எம்மண்ணில் எழுதப்பட்ட வரலாற்றுச் சான்றுகள் இத்தகைய எழுச்சி மிகு போராட்டம் உலகின் எந்த மூலையிலும் இடம்பெறவில்லை.

எங்கள்நாடு விடுதலை அடையும் போது உங்கள் விடிவிற்காய் களமாடிய வீரமறவர்களில் ஒருபகுதியினரை இம் மண்ணில் நீங்கள் நிச்சயம் பார்ப்பீர்கள் ஆனால் எமது விடிவுக்காக களமாடிய காவியத்தலைவர்கள் 16ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை என்றுமே நீங்கள் காணமுடியாது. உங்களுக்காக வீரச்சாவடைந்த இத்தியாகச் செம்மல்களை நாம் என்றுமே பார்க்கவே முடியாதென்றும் தளபதி பாப்பா மேலும்பேசுகையில்கூறினார்.

(இ-10)

# பகைமையுணர்வை மறந்து, உறவை வளர்த்து தமிழினம் மறுமலர்ச்சி காண முயல வேண்டும்

உலகம் இன்று உரு மாறிக் கொண்டே இருக்கிறது. ஆனால் அதன் தொடர்பிலுள்ள உயிரினங்கள் என்றும் போல் இன்றும் இருக்கின்றன. அவைகளிடத்தில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. ஆனால் பகுத்தறிவுள்ள மனிதனிடத்தில் தான் மாற்றமும் முன்னேற்றமும் மாறிமாறித் தோன்றி மறைந்த வண்ணமிருக்கின்றன.

### மனிதனின் மாற்றம்

மிருகத்திற்கும் மனிதனுக்கும் வித்தியாசம் தெரியாத காலம் ஒன்றிருந்தது. அந்தக் கால வெள்ளம் மாறுபாடடையவே மனிதன் வேறு, மிருகம் வேறு என்ற வேறுபாடு முளைத்தது. இப்படிப் படிப்படியாக வளர்ந்து வந்த மனிதன் மனிதாபிமானத்தின் நிலைக்காளானான். பகுத்தறிவுக்கும் பரந்த மனப்பான்மைக்கும் பெருந்தூணானான் இம்மட்டுமா?

நன்மைக்கும் தீமைக்கும் பொய்மைக்கும் வாய்மைக்கும், ஆசைக்கும் நிராசைக்கும் பேராசைக்கும் பெருந்தொல்லைக்கும் அறிவுக்கும் அறியாமைக்கும் அகத்துக்கும் புறத்துக்கும் ஏமாற்றவும், ஏமாற்றப்படுவதற்கும் நீதிக்கும் அநீதிக்கும் இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் இலக்கானான். இலக்காகிக் கொண்டேயிருக்கிறான். தோன்றிய உயிரினங்கள் யாவும் முன்னேறவும் இல்லை. பின்னேறவும் இல்லை. அன்று அவைகள் எப்படியிருந்தனவோ அப்படித்தான் இன்றும் உள்ளன.

ஆனால் மனிதன் மட்டும் பலவகைகளில் உருமாறிக் கொண்டேயிருக்கிறான்.

### வளராத மனப்பான்மை

அவைகளிடத்திலே அந்தக் காலத்திலே என்ன முறைகள் இருந்தனவோ, அவைகளே இன்றும் உள்ளன. மனிதன் மட்டும் காலத்துக்குக் காலம்

**க. சீவகாருணியம்**

மாறிக்கொண்டே வந்துவிட்டான். எதையோ நினைத்து என்னவோ செய்து முன்னேறிவிட்டான். அவனுடைய முன்னேற்றத்தில் ஒரு மித்து வாழும்மனப்பான்மை வளர்ந்ததா என்றால் இல்லை. எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தானா என்றால் அதுவுமில்லை.

மனிதன் மனிதனை மதிக்க துதிக்க எந்தெந்த அடிப்படையான பாடத்தைக் கற்றுக் கொள்ளவேண்டுமோ அதைக் கற்றுக் கொள்ளவில்லை. அவன் கற்றுக்கொண்டிருப்பது தன்னை வளர்த்துக் கொள்வதற்கு எது வேண்டுமோ அது தான் காரணம். பொது நலக் கண்ணோட்டம் மிகக்குறைந்து விட்டதே இதற்கு அடிப்படையும் வெளிப்படையாகும்.

### அறியாமை

குறைசொல்வது மனமாற்றம் பெறுவது, வஞ்சிப்பது, பெருமைப்படுவது, பூசலை உருவாக்குவது, ஒற்றுமை இழப்பது, நன்மையை அழிப்பது, பிளவுபடுத்துவது செய்நன்றி மறப்பது. விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்வது போன்றகீழான செயல்களால் மனிதன் மனிதத் தன்மைக்கப்பாற் சென்று கொண்டிருக்கிறான். இவற்றிற்கெல்லாம் என்ன காரணம் சிந்தனையற்று செயலாற்ற மறந்து போனதேயாகும். மெய்ப் பொருள் காணவிழையும் மனத்தை அப்புறப்படுத்தி விட்டு பொய்ப் பொருள் காணும் இதயத்திற்கு முதலிடம் கொடுத்து நடக்கத் தொடங்கியதேயாகும். இந்தக் குறை குடும்பத்திலிருந்து அரசியல் வரையில் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி உள்ளது. இதுவும் ஒருவித அறியாமையேயாகும்.

இந்த நாட்டைப் பொறுத்த வரையில் எத்தனையோ வகையான அறியாமைகள் உலவுகின்றன. அந்த அறியாமைகளினால் தான் நம்முடைய சந்ததியினர் சாதிக்க வேண்டியவைகளையெல்லாம் விட்டு விட்டு நம்முடைய சமூகம் சீரழிந்து போகத்தக்க அளவிலே தேவையற்ற மூட நம்பிக்கை மீதெல்லாம் மோகம் கொண்டு இன்னமும் சொல்லப் போனால் வெறி பிடித்து அலைந்து முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை போட்டு தடைப்படுத்தும் தடைக்கல்லாக நின்று விட்டனர். அதையே கடவுளாகவும் கடமையாகவும் கண்டு விட்டனர்.

### சீரழிவுகள்

இப்படிப்பட்ட அறியாமைகளினால் தான் எல்லா நாடுகளை விடவும் இந்த நாடு மிகவும் சீரழிந்து போயிற்று. இந்தச் சீரழிவைப் போக்கி சிறப்பானதொரு சமூக அரங்காக இனியேனும் மாற்ற நாம் முன்வரவில்லையானால் எதிர்காலத்தில் தமிழினத்தின் நிலை எந்தத் திசையை நோக்கி அடிமையாகும் என்பதே புரியாத புதிராகி விடும்.

### மறுமலர்ச்சி காணவேண்டும்

இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட நாமும் நம் சந்ததியினரைப் போல் திருப்பதிகங்களைப் பாடிக் கொண்டிருப்போமேயானால் இறுதியில் கிடைப்பது திருவோடும் தெருவோடுமாகத்தான் அமையும். இன்றைக்கும் நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஒவ்வொரு நாடும் எப்படியெல்லாமோ போட்டி போட்டுக் கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. எந்தெந்த விதத்திலெல்லாமோ வளர்ச்சிபெற்றபடி இருக்கிறது. ஆனால் நாம் மட்டும் நம்முன்னோர்களை விட மிகவும் கீழ்த்தரமான எண்ணங்களுக்கு முதலிடமளித்து அதுவேநமக்குச் சிறந்தது உயர்ந்தது என்று எண்ணிக் கொண்டுபலதுறைகளில் பல கோணங்களில் தாய்த்திருநாட்டுக்குத் தவறிழைத்து வருகிறோம். இந்த தவறு இனியும் தொடராதிருக்கும் வகையில் நம்மை நாமே செப்பனிட்டுக்கொள்ள வேண்டும். இன்னமும் நம்மில் பலர் பொறாமைக்கும் பேராசைக்கும் முதலிடமளித்து வருகின்றனர். இதனால் விளைவது என்ன என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த எண்ணிப் பார்க்காத குறையினால் தான் தமிழினம்தாழ்ந்தது. ஆகவே இனியாகிலும் தமிழினம் ஒற்றுமைப்பட்டு சிந்தித்து செயலாற்ற வேண்டும். அதுதான் இன்றைக்கு இருக்கும் இந்தச் சூழ்நிலைக்குத்தேவையானதும்அவசியமுமாகும். இந்த நடைமுறை ஈடேறும் காலந்தான் தமிழினத்திற்குரிய மறுமலர்ச்சிக் காலம்.

### பகைமையை ஒழிக்குக

இந்த மறுமலர்ச்சி வருவதற்குள் நமக்குள்ளாக இன்றிருக்கும் பகைமை உணர்ச்சி மறைய வேண்டும். அந்தப் பகைமையைமறந்துபாசத்தை வளர்த்தால் தான் பலவகையில் தாழ்ந்து போயுள்ள தமிழினம் புதிய பொலிவைப் பெற முடியும். அதைவிட்டுவிட்டு எதை எதையோ எண்ணி இனியும் நாம் நடைபோடுவோமேயானால் இருப்பதையும் இழந்து, இழந்ததையும் மீட்க முடியாத அளவுக்கு குன்றி, எடுப்பார் கைப்பிள்ளையாகவே போய் விடுவோம். ஆகவேஇனியாகிலும் சிந்தித்து பகுத்தறிவுடனும் ஒற்றுமையுடனும் மற்றவர்களுக்கு அடிமையாகாமல் தொண்டாற்றவும், தூய வாழ்க்கை நடாத்தவும் முன்வரவேண்டும். அப்போது தான் அறியாமை அகலும். அடிமைத்தளை ஒழியும். தாய்மொழி செழிக்கும். தமிழினம் தலை நிமிர்ந்து எழும். ●

## கண்காணிப்புக் குழு அலுவலகம் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டகண்காணிப்புக் குழுவின் அலுவலகம் இன்று மு.ப.10.00மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

அரசு-புலிகள் இடையே உருவாகியுள்ள நிரந்தர யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் குழுவின் இவ்வலுவலகம் இல.195,கோவில் வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி அலுவலக வெளிநாட்டு மற்றும் அரச- புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளதாக தெரியவருகிறது.

(உ)

## நூல்வெளியீடும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

சமூக சோதி கா.கணேசதாசன் ஆக்கிய 'அறநெறிச் சிந்தனைகள்' என்னும் நூல்வெளியீட்டுவிழாவும்பரிசளிப்புநிகழ்வும் நாளை புதன் கிழமை காலை7.30 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ)

## இலங்கையர்க்கு இத்தாலி வேலை வாய்ப்பு வழங்கும்

(கொழும்பு)

இத்தாலி இலங்கையர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட தொகை வேலை வாய்ப்பை ஒதுக்கித்தருவது பற்றி ஆராய்ந்து வருவதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தாலிக்குச் சட்ட விரோதமாகச் செல்ல முயற்சித்து துன்பங்களுக்குள்ளாகும் இலங்கையர் பற்றி இரு அரசாங்கங்களுமே கலையடைந்துள்ளன.

மேற்படி நடவடிக்கை இதனை ஓரளவு தீர்த்து வைக்கும் என்று நம்பப்படுகிறது. 2003 ஆம் ஆண்டில் ஆயிரக் கணக்கான வேலை வாய்ப்புக்களுக்கு வழி வகுக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான பேச்சுக்களின் போது இத்தாலிக்கு ஆட்களை கடத்தும் பேர் வழிகள் மீது இலங்கை கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இத்தாலித் தூதுவர் வெளியுறவு அமைச்சர்டிரோன் பெர்னாண்டோவிடம் தெரிவித்துள்ளார். (எ)

## திருமலை- யாழ். விசேட கப்பல் சேவை ஏப்ரல் 12-ல் ஆரம்பம்

(கொழும்பு)

ஆகிய நாட்களில் சேவை

## பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரியின் க. பொ. த. (சா/த) பரீட்சை முன்னணிப்

## களுத்துறைக் கைதிகள்

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விசேட பயணிகள் கப்பல் சேவை நடத்தப்படவுள்ளதாகக்கப்பல் முகவர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச் சேவையில் 'திருமலை நகரம்' கப்பல் ஈடுபடவுள்ளது.

வாரத்தில் திங்கள், புதன் ஆகிய நாட்களில் சேவை நடத்தும்.

வரும் 12 ஆம் திகதி திருமலை நகரம் யாழ்ப்பாணம் வரவுள்ளது.

பயணப் பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் இன்று தொடக்கம் பதிவு செய்யலாம் எனவும் கப்பல் முகவர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ)

(சா/த) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு,

இ. தர்மேந்திரா 4எ, 2பி, 2சி, எஸ், த. கௌதமன் 4எ, 4சி, எஸ், கோ. சபேசன் 2எ, 2பி, 3சி, 3 எஸ், சி. கார்த்திகா 2எ, பி, 4சி, 3 எஸ், செ. ஆன் றெஜிதா 2எ, பி, 4சி, எஸ், சி. துஷ்யந்தன் எ, 4சி, 4 எஸ். (உ)

# தென்பகுதியில் இருந்து முஸ்லிம் தூதுக்குழு வட-கிழக்கு விஜயம்

(கொழும்பு)

தென்பகுதியிலிருந்து முஸ்லிம் தூதுக்குழுவொன்று ஆறுநாள் பயணத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் வட-கிழக்கு மாகாணத்திற்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளது.

வெகுசனத் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் ஆலோசனைக்கமைய இவர்கள் மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் திருகோணமலை, யாழ்ப்பாணம், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு செல்லவுள்ளனர்.

நாட்டில் தற்போது நடைமுறையிலிருந்து, வரும் யுத்த நிறுத்தத்தை கருத்தில் கொண்டு பல்வேறுபட்ட முஸ்லிம் நிறுவனங்களினதும், அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் இவ்வாறான விஜயத்தினை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# வருடாந்த உற்சவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு நெடுவினிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (உ-249)

# பழுதடைந்த நிலையில் ஜெனரேற்றர்

(உடுவில்)

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் ஜெனரேற்றர் நீண்டநாட்களாகப் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அங்கு மின் விசிறிகள், மின்விளக்குகள் பாவிக்கமுடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது நிலவுகின்ற கடும் உஷ்ணம் காரணமாக அங்கு பணியாற்றும் ஊழியர்களும், செல்லும் வாடிக்கையாளரும்பெரும் அவஸ்தைப் படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனால் ஊழியர்கள் தமது பணியை செவ்வனே செய்ய முடியாதிருப்பதாக வங்கியாளர்கள் தெரிவிக்கின்றனர். (சு-129)

# களுத்துறைக் கைதிகள் புதன் முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போர்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நாளை புதன்கிழமை தொடக்கம்சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நீண்டகாலமாக விசாரணைகள் இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தம்மை உடனடியாக விடுதலைசெய்யவேண்டும் அல்லது வழக்குத் தாக்கல் செய்து விசாரணைகளைஆரம்பிக்க வேண்டும்எனக்கோரியே இவர்கள் உண்ணாவிரதத்தினை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதேவேளை இவர்களது உண்ணாவிரதபோராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, ஏனைய சிறைகளில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளும் உண்ணாவிரதம் இருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (செ)

## கொள்ளைகளை கட்டுப்படுத்துக!

# புனர்வாழ்வுக் கழகம் புலிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் புலிகளின் பெயரை பயன்படுத்தி கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுவருகிறது.

இது தொடர்பாக சம்பந்தப் படுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தமிழர் விழிப் புனர்வுக் கழகம் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இடங்களில் சிறிய ஆயுதங்களுடன் திரியும் இளைஞர் குழு ஒன்றே இவ்வாறான செயலில் ஈடுபட்டுள்ளது எனவும் அவர்கள் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர். (உ-5)

## இன்று ஒரு தகவல்

# கடவுள் கற்பகமரமே!

ஒரு நாடோடி இருந்தான். அவன் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் ஒரு பெரிய மைதானத்தை அடைந்தான். அன்றைய தினம் கடுமையான வெயிலில் நீண்ட தூரம் அவன் அலைந்திருந்தான். எனவே உடம்பெல்லாம் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. அத்துடன், களைப்படைந்து சோர்ந்தும் போயிருந்தான். தூரத்தில் ஒரு மரம் இருந்தது. அதைப் பார்த்ததும் களைப்பை நீக்கிக்கொள்வதற்காக மரத்தின் நிழலை அடைந்து உட்கார்ந்தான். காற்று இதமாக வீசியது. அந்தக் காற்று அவனுக்கு இன்பமாக இருந்தது.

'ஆகா! இப்போது நல்ல படுக்கை ஒன்று இருந்தால் எவ்வளவு சுகமாகத் தூங்குவேன்' என்று தனக்குத் தானே அவன் சொல்லிக் கொண்டான். இந்த எண்ணம் உதித்து மறைவதற்குள்ளாகவே, தனக்குப் பக்கத்தில் மெல்லிய பஞ்சணை ஒன்று இருப்பதைப் பார்த்தான். அது எப்படி அங்கு வந்தது என்பது அவனுக்கே தெரியவில்லை. யோசித்துப் பார்த்தான். திகைத்தான். உண்மையில் அவன் கேட்டதை எல்லாம் கொடுக்கும் கற்பக மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்தான் ஆனால் அது அவனுக்குத் தெரியவில்லை.

மேற்கொண்டு யோசித்துப் பார்க்காமல், களைப்புமேலிட்டுப்போயிருந்த அவன் அந்தப் பஞ்சணை மீது சுகமாகப் படுத்துக்கொண்டான், சற்று நேரம் கழிந்தது. பிறகு அவன் உடம்பெல்லாம் ஒரே வலியாக இருக்கிறதே! கை கால்களைப் பிடித்துவிட இரண்டு இளம் பெண்கள் இப்போது இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தான். அவன் அப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே, இரண்டு இளம் பெண்கள் தோன்றித் தன் கால்களைப் பிடித்து விடுவதைப் பார்த்தான்.

அவன் உள்ளத்தில் உவகை பெருக்கெடுத்து ஓடியது. ஆனந்தத்தில் இருப்பவனுக்கு அவர்கள் வந்த அதிசயம் தோன்றுமா? வலி சற்றுக் குறையவும், பசி உண்டாவதைக் கண்டான். 'ஆகா! என்ன ஆச்சரியம்! நினைத்ததெல்லாம் இந்த இடத்தில் கிடைக்கிறதே! படுக்கை வேண்டுமென்று நினைத்தேன். படுக்கை வந்தது. கை கால்களைப் பிடித்து வலி தால், எவ்வளவு பிரமாதமாய் இருக்கும்! என்று நினைத்தான்.

இப்படி அவன் நினைத்தானோ இல்லையோ உடனே தன் முன்னால் அறுசுவையோடு கூடிய உணவு வகைகள் இருப்பதைப் பார்த்தான் எப்படி அவை மாயமாய் வந்தன என்பதைப் பற்றிச் சிந்திக்க வில்லை. தன் பசியாற அவற்றை அவன் திருப்தியுடன் சாப்பிட்டு முடித்தான். பிறகும் அந்தப் பஞ்சணை மீது நன்றாகச் சாய்ந்து படுத்துக் கொண்டான். நினைப்பவை எல்லாம் கிடைப்பது பற்றி அந்த நாடோடி மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். இனி அவனுக்கு வேண்டியது ஒன்றும் இல்லைப் போலும். அன்றைய தினம் தனக்கு ஏற்பட்ட அதிசயச் செயல்களைப் பற்றிச் சிந்தித்தான். அப்படிச் சிந்தித்து மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே, அவனது உள்ளத்தில் ஒரு விதபயம் உண்டாயிற்று. இப்போது ஒரு புலி இங்கே தோன்றினால் என்ன ஆகும்? என்று நினைத்தான். அந்த எண்ணம் வந்த உடனேயே ஒரு பெரிய காட்டுப் புலி அங்கு தோன்றியது. அது அவன் மீது பாய்ந்து அவனை அடித்துக் கொன்றுவிட்டது.

இம் மாதிரித்தான் உலகத்தவர் அனைவரும் ஆசாபாசத்தினால் கெடுகிறார்கள். அவர்களிடம் புத்தி ஒரு நிலையாக இருக்காது. நீயும் உன் தியான காலத்தில் பொருளையும், புகழையும், மற்றவற்றையும் விரும்பினால் அவற்றைப் பெற முடியும், ஏனென்றால் விரும்பியதை எல்லாம் தரும் கற்பகமரம் போன்றவர் கடவுள். எதை ஒருவன் விரும்பினாலும், அதை அந்த மரம் கொடுத்து விடும். ஆனால் அப்படி நீ விரும்பியதைப் பெற்று மகிழ்ந்து கொண்டிருக்கும் போது, புலி வந்து விட்டால்? என்பதைப் போன்ற ஒரு பயம் உன்னை அறியாமலே உன் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும். அந்தப் புலி, நோய் பிணி, மரணம், செல்வம், புகழ் ஆகியவையாக இருக்கும் இவை புலியினால் வரும் துன்பங்களைக் காட்டிலும் பல ஆயிரம் மடங்கு பயங்கரமானவையாக இருந்து உன்னை வீழ்த்திவிடும்.

எனவே, தியானம், பக்தி, ஜபம் முதலிய நல்ல ஒழுக்கங்களைக் கொண்டு ஒருவன் தன் உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்.

பனம் கைவினைப் பொருட்களை

# வெளிநாட்டில் சந்தைப்படுத்த வாய்ப்பு பெற்றுத்தர முடியும்

## காணி அமைச்சர் ராஜித உறுதிமொழி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும் பட்சத்தில், உள் நாட்டில் வடிவமைக்கப்பட்ட பனம் பொருட்களை வெளிநாட்டில்சந்தைப்படுத்த நல்ல வாய்ப்பு பெற்றுத்தர முடியும்.

பனை அபிவிருத்திச் சபையின் பனம் பொருட் கண்காட்சியும் போட்டியும் நிகழ்வை நேற்றைய தினம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் திறந்து வைத்துப் பேசுகையில் காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்;

இவ்வாறான கைவினைத் திறனை நான் கொழும்பில்கூட கண்டதில்லை. இங்குள்ள தொழிலாளர்களின் திறமையைக் கண்டு நான் வியப்படைகிறேன்.

தென்பகுதியை ஒத்த வகையில் வடக்கையும் புனரமைப்புச் செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு.

தெற்கின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் விசேட தளமாக வடக்கு அமைந்திருப்பதும்குறிப்பிடத்தக்கது என்றார்(உ -10)

## 40 குளங்கள் புனரமைப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ள சிறு நீர்ப்பாசனக் குளங்களுள் இவ்வருடம் 40 குளங்கள் நியாப் திட்டத்தின் கீழ் 19.33 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதற்கான திட்ட மதிப்பீட்டுப் பணிகள் யாவும் முடிவடைந்து விட்டன எனவும் மிக விரைவில் இக் குளங்களின் புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தொழில் நுட்பவியலாளர் ஏ.சிவானந்தன் தெரிவித்துள்ளார்

(உ-77)

## புனரமைப்பு திட்டங்களை தயாரிக்க குழு தெரிவு

யுத்தத்தினால் அழிந்த நிலையிலுள்ள தென்மராட்சி பிரதேசத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான திட்டங்களைத் தயாரிப்பதற்காக 15 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை தலைமையிலான இக்குழுவில் திட்டமிடல் அதிகாரி எஸ். யோகானந்தம், பேராசிரியர் க. கந்தசாமி, டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் மற்றும் கிராம சேவையாளர்கள் அடங்கியுள்ளனர்.

(உ-77)

## படையினர் விரைவில் வெளியேறுவர்

(தென்மராட்சி)

கொடிகாமத்தில் இயங்கி வரும் மிருசுவில் அரச வைத்தியசாலையில் இருந்து பாதுகாப்புப் படையினர் மிக விரைவில் வெளியேறுவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை இவ் வைத்திய சாலையைப் பொறுப்பேற்று நடத்துவதற்கு உரிய திணைக்களம் முன் வரவில்லை என இப் பகுதி கிராம சேவையாளர் மூலம் தெரியவருகின்றது. (உ-77)

## மாடு திருடியவருக்கு விசித்திர தண்டனை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பொலிஸார் திருடர் ஒருவருக்குப் புதுவிததண்டனை ஒன்றினை வழங்கியசம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

நாரந்தனை மத்தியில் ஒரு கிராமசேவகரின் வீட்டில் உள்ள மாடுஒன்றினைத் திருடிவந்து இறைச்சிக்காக வெட்டிய நபரினை கண்டுபிடித்து அண்மையில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

குறிப்பிட்ட திருடன் இறைச்சிக்காக மாடுவெட்டிய இடத்தில் இருந்து ஊர்காவற்றுறைக்கு மாட்டுத்தோலினால் உடலைப் போர்த்தி அழைத்துச் செல்லப்பட்டான்

மேற்படி திருடன் நாரந்தனை தெற்கைச்சேர்ந்தவன் எனத்தெரிய வருகின்றது.

(க-75)

## தலைவர்படம் திரை நீக்கம்

(புத்தூர்)

புத்தூர் சந்திப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப்படம்ஒன்று திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலப்பகுதியின்

## ஐந்து வழக்குகளையாவது உடன் விசாரிக்கவும்

## அமைச்சர் அவசரபணிப்பு

(கொழும்பு)

முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் முறைப்படி விசாரணைகள் செய்யப்படாத ஐந்து வழக்குகளை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா புலனாய்வுத் துறையினரைப் பணித்துள்ளார்.

ஆர்ப்பாட்டப் பேரணியின்

பத்தேகம சஞ்ஜீவ கொலை விவகாரத்தில் பொலிஸாரின் நடவடிக்கைகளில் நியாயமற்ற வகையில் தலையீடு செய்தமை பற்றியும் விசாரணைகள் நடை பெறவுள்ளன.

செய்தியாளர் தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன.

இதேவேளைதெற்கிலுள்ள சிறைகளில் இருக்கும் விடு

கால்களைப் பிடித்து வலி நீக்க இளம் பெண்களை விரும்பினேன். இதோ அவர்களும் வந்து கால்களைப் பிடித்து விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் கிடைத்தபோது பசியாற உணவு வராதா? இப்போது அறுசுவை உண்டி கிடைத்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்து வரும் போது சிறிது சிறிதாக உலக ஆசைகளையெல்லாம் விட்டுவிட வேண்டும்.

நன்றி
ஸ்ரீ ராம கிருஷ்ணர்
சொன்ன கதைகள்

---

ளது.

பொதுமக்களும் மாணவர்களும் இணைந்து நேற்றுமுன்தினம் இவ்வுருவப் படத்தினைத் திரைநீக்கம்செய்தனர்.

(உ-235)

---

ஆர்ப்பாட்டப் பேரணியின் போது செய்தியாளர்கள் தாக்கப்பட்டமை, 'சட்டன பத்திரிகைஆசிரியர்ரோஹண குமார்படுகொலை,றுஹந்தா சந்திரவேகா ஆகிய இரு பாடகர்கள் மீதான தாக்குதல், அனோஜா வீரசிங்கா என்பவரின் வீடு உடைக்கப்பட்டு தீயிடப்பட்டமை ஆகிய சம்பவங்களையேவிசாரிக்குமாறு அமைச்சர் பணித்துள்ளார்.

சிறைகளில் இருக்கும் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த கைதிகளை அவர்களின் பிரதேசத்திலுள்ள சிறைகளுக்கு அனுப்ப வேண்டும். என்றும் அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இதன் மூலம் அவர்களின் பெற்றோர்கள், உறவினர் அவர்களைச் சென்றுபார்வையிட முடியும் என்று கருதப்படுகிறது. (எ)

# ஜனாதிபதி தேர்தலில் யார்? பொ. ஐ. முவில் முரண்பாடு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி பிளவுபடுவதற்கு முன் அதற்குப் பொருத்தமான ஒரு தலைவரை நியமிக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் சார்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அனுரா பண்டார நாயக்கா போட்டியிடப்போவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே இந்த முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

அடுத்த ஜனாதிபதி தேர்தலின் போது போட்டிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உதவித் தலைவரும் முன்னாள் அமைச்சருமான எச்.எம்.பௌசி கருத்து தெரிவிக்கையில்;

இவ்வாறான கருத்துமுரண்பாடுகளினால் கட்சியின் நலனும், எதிர்காலதிட்டங்களும் பாதிப்படையும் என்றும்,

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் பணி பாராளுமன்ற குழுவிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மிகப் பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளர் என அபிப்பிராயப்படுவதாகவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(எ-8)

## ஆணைக் குழுக்கள் செயற்படும்

(கொழும்பு)

இவ்வாண்டு யூன்மாதத்திலிருத்து அரசியலமைபபுச் சபையினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள்செயற்படும் விதத்தில் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அரசியலமைப்புச்சபை தனது முதலாவது கூட்டத்தைஏப்ரல் 2ம் திகதிநடத்தியது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சபை உறுப்பினர் களுக்கும் சபையினால் அமைக்கப்படும் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் பற்றிஅமைச்சரவை தீர்மானித்துள்ளது. அதன்படி அரசியலமைப்புசபை உறுப்பினர்களுக்கு மாதாந்தம்30,000 ரூபா வழங்கப்படும் ஆணைக் குழுக்களின் தலைவர்களுக்கு மாதாந்தம் 35,000ரூபாவும் உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 20,000ரூபாவும் வழங்கப்படும். (எ)

## சிந்தனைக்கு விருந்து

**கண்டிப் பாதையிற் செல்வதைக்**

**காதலிப்போர்!**

ஆகாய விமான சேவை
அதிகரித் திடலாம் செய்தி
பாகாக இனிக்கும் நல்ல
பணக்காரர்க் கானால் மற்றோர்
சாகாய மாகக் கண்டிப்
பாதையாற் செல்ல என்று
மாகாத லோடு காத்து
வருகின்றார் ஏமாற் றாதீர்

-பழையவன்

சாகாயம்;- சகாயம் என்பதன் நீட்டல் விகாரம்.

# அதிருப்தியடைந்த ஆளும்கட்சி உறுப்பினர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தாவுவார்கள்

## ஸ்ரீ. சு. க. பொதுச் செயலர் தகவல்

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பொதுஜன ஐக்கிய முன்னணியில் சேர்ந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபாலா சிறிசேனா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் அதிருப்தியடைந்த உறுப்பினர்களே இவ்வாறு கட்சித் தாவல் செய்ய உத்தேசித்துள்ளனர் எனவும், இவ்வுறுப்பினர்களுடன் இது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டாலும் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் அரசாங்கத்தின் கட்சிக்கு செல்ல மாட்டார்கள் எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (உ-5)

### பரிசில் வழங்கல்

(மீசாலை)

யாழ். மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலையத்தால் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை சுவரொட்டிப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல் இன்று பி. ப. 3.30 மணிக்கு யாழ். மனித முன்னேற்ற நடுநிலைய அலுவலகத்தில் இயக்குநர் சி. ஜி. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-229)

## பிரச்சினைகளை ஆராயும் அவசரக் கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி, கொடிகாமம் பச்சிலைப்பள்ளி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் நாளை புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கொத்தணியின் தலைவர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் க. நடராஜாசபையின் இப்போதைய தலைவர் பொ. சிவபாதம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (உ-77)

## பாதை திறந்ததில் வவுனியா மக்களும் மகிழ்வு

(வவுனியா)

ஏ-9 பாதை நேற்று திறந்து வைக்கப்பட்டதும் வவுனியா மக்கள் பெரும் மகிழ்வுடன் கலகலப்பாக காணப்பட்டனர்.

இதுவரை காலமும் வதிவிடப்பாஸ், பிரயாணப் பாஸ் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். அத்தகைய கஷ்டங்கள் நீங்கிவிட்டதில் மக்கள் பெரும் ஆறுதலடைந்துள்ளனர்.

அத்துடன் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப்பிரதேச மக்களுக்கும் இது வரை காலமும் இருந்து வந்த பொருள் தட்டுப்பாடுகள் நீங்கி வேண்டிய அளவு பொருட்கள் வாங்கக் கூடிய நிலைமை விரைவில் திரும்பி விடும் என்ற எதிர்பார்ப்பிலுள்ளனர் (செ)

## கொலை விசாரணை தொடர்ந்தும் நடக்கிறது

(கொழும்பு)

பேருவளை கொலைச்சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பதில் பொலிஸ்மா அதிபர் ரி.இ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

மேலும் பேருவளை பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் இந்நிலையில் இதுவரை எந்தவொரு உத்தியோகத்தர்களையும் சேவையில் இருந்து இடைநிறுத்தப்படவில்லை எனவும் இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை விசேட பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை விடுதியொன்றின் உரிமையாளரான ராசையா சுப்பிரமணியம் மார்ச் 3 ஆம் திகதி வெட்டிக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக கொட்டாஞ்சேனை பொலிஸார் அவரது மனைவியையும் வேறும் ஐந்து சந்தேக நபர்களையும் புதன் கிழமை கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாப நபரை கொலை செய்வதற்கு ஒப்பந்தக் கொலைகாரரை அமர்த்திமுற்பணமாக ரூபா 50,000 ஐ மனைவி வழங்கியிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (க)

## கசிப்பை ஒழிக்க புலிகள் ஒத்துழைப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சட்ட விரோதமாக இடம் பெறும் கசிப்பு உற்பத்தி விற்பனைகளை ஒழிக்கும் நடவடிக்கைகளில் பொது அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடனேயே இக்கசிப்புஒழிப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக துண்டுப் பிரசுரங்கள் மூலமும் ஒலி பெருக்கி மூலமும் அறிவித்தல் விடப்பட்டுள்ளது எனவும் இதனை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

## பனை அபிவிருத்தி சபைக்கு காணி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி சபைக்கு சொந்தக் கட்டடம் அமைப்பதற்கு காணி வழங்கப்படுமென காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன யாழ். செயலகத்தில் அரச அதிபர் சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

யாழ்ப்பாணத்தில் பல அரச நிறுவனங்கள் சொந்தக்காணி இல்லாமல் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு நடமாடும் சேவை ஒன்றினை உடனடியாக ஏற்படுத்தவுள்ளோம் என்று தெரிவித்தார். (த-10)

## வேலை வாய்ப்பு வழங்க தேசிய திட்டம் தயாரிப்பு

(கொழும்பு)

நாட்டில் வேலை வாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான தேசியத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்தசமரசிங்கா தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கிளையொன்றை மாத்தறையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் எதிர் வரும் சர்வதேச தொழிலாளர்தினத்தில் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## க.பொ..த(சாதாரணம்) முன்னணிப் பெறுபேறுகள்

(காரைநகர்)

கடந்த க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற காரைநகர் பாடசாலை மாணவர்கள் விபரம்.

யா/கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்

செல்வி சூரியகலா சுந்தரேஸ்வரன் 8எ 2சி, செல்வி

6எ 3பி சி, செல்வன் தம்பிராசா அசோக்குமார் 6 எ2பி எஸ், செல்வி நடராசா குகதர்சினி 6எ பி 2சி எஸ், செல்வி மனோரஞ்சிதம் காந்திதிலகர் 5எ பி 3சி எஸ், செல்வி அனுசியா சிறிஸ்கந்தராசா 5எ 3சி எஸ்.

யா- யாழ்ற்றன் கல்லூரி

செல்வி ஜெயதர்சினி பத்மசோதிநாதன் 5எ 3பி சி

## ஓராண்டு பூர்த்திவிழா

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் மகளிர் நிதியுதவி நிலைய ஓராண்டு பூர்த்தி விழா, கெயர் நிறுவன அனுசரணையுடன் இன்று பி. ப 3.00 மணிக்கு புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## லங்கா சீமெந்து நிறுவன ஊழியர் மறியற் போரை ஆதரித்து அறிக்கை

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் தொடர் மறியற் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பல்கலைக் கழக ஊழியர் சங்கம் அறிக்கை

மாக ஓய்வு பெறும் கடிதமும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஊழியர்களின் போராட்டத்துக்கு பல்கலைக் கழக ஊழியர் சங்கம் தனது தார்மீக ஆதரவை வழங்குவ

தவலோசனா சுந்தரேஸ்வரன் 7எ பி 2சி, செல்வன் சிவசுப் பிரமணியம் சுரேஷ்குமார்

டபிள்யூ, செல்வி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் 5எ பி 3சி எஸ். (க-ப-246)

## ட்ரயல் அற் பார்
# நீதிமன்று விதித்த மரணதண்டனை ஊர்ஜிதம்

(கொழும்பு)

1999 செப்டம்பர் 2 ஆம் திகதி அனுராதபுரம் இராணுவ முகாமிலிருந்து கணேமுல்லையிலுள்ள தனது வீடு நோக்கி சென்றபோது கடத்திச் செல்லப்பட்டு, கொலை செய்யப்பட்ட 26 வயதுடைய இராணுவ வீராங்கனை இணோக்கா செவ்வந்தி வீரசேகரவை கொலைசெய்தவரென சந்தேகிக்கப்பட்டவருக்கு ட்ரயல் அற்பார் நீதிமன்றம் விதித்திருந்த மரண தண்டனையை உயர்நீதிமன்றம்ஊர்ஜிதம் செய்துள்ளது.

மேற்படி வீராங்கனை கொலைசெய்யப்பட்டு உடல் கடவத்தையிலுள்ளவீடொன்றில் புதைக்கப்பட்டிருந்தது.

சட்டமா அதிபர் விடுத்த உத்தரவின்பேரில் இதன் விசாரணை ட்ரயல் அற் பார் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்றிருந்தது. விசாரணை முடிவில் குற்றவாளிஎனக்காணப்பட்ட பிரபாத்டீசேரம்என்பவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனைக்கெதிராக பிரபாத் மேன்முறையீடு செய்திருந்தார். பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, ஷிராணி பண்டாரநாயக்க, பீ. எதுசூரிய, எச். எஸ். யாப்பா, ஜே. ஏ. என். டீ. சில்வா ஆகிய ஐந்து நீதியரசர்கள் இந்த மேன்முறையீட்டை விசாரித்தனர்.

விசாரணைமுடிவில் ட்ரயல் அற் பார்நீதிமன்றம் விதித்த மரணதண்டனைமீண்டும்ஊர்ஜிதம்செய்யப்பட்டுள்ளது. ட்ரயல்- அற்- பார் நீதிமன்ற தீர்ப்புக்கெதிராக நேரடியாக உயர்நீதிமன்றத்திற்கு வழக்கொன்று பாரப்படுத்தப்பட்டது நீதித்துறை வரலாற்றில் இது முதற்தடவை. (உ)

---

பெறவுள்ளது.

நிலையத்தின் தலைவி க. அமுதினி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கா. பாலகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினர்களாகஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம்ஆகியோரும்கலந்துகொள்ளவுள்ளனர். (உ-75)

---

கழக ஊழியர்சங்கம்அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி 26.03.2002 செவ்வாய்க்கிழமை முதல் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

1962க்கு பின் மீளாய்வு செய்யப்படாத சம்பளத்திட்டம், பாதிச்சம்பளம் ஆகிய நடைமுறைகளால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட இவ்ஊழியர்களுக்கு தற்போது கட்டாய

---

தார்மீக ஆதரவை வழங்குவதுடன் வட பிரதேசத்தில் உள்ள பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளம், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சீமெந்து லிமிடெட் ஆகிய இயங்காத ஆலைகளின் ஊழியர் பிரச்சினைகள் குறித்து வடபிரதேச தொழிற் சங்கங்கள் மற்றும் மனிதநேய அமைப்புக்கள் தாமதமின்றி காத்திரமான தொரு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்த விரும்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

---

# வட-கிழக்கு வைத்தியர்களுக்கு விரைவில் விசேட கடமைப்படி
## சுகாதார அமைச்சு முடிவு

வடக்கு- கிழக்குப்பிரதேசங்களில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் சகல வைத்தியர்களுக்கும் விசேட கடமைப்படி வழங்க சுகாதார அமைச்சு முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதாரஅமைச்சுக்கு விடுத்த வேண்டுகோளினை அடுத்தே சுகாதார அமைச்சுஅதிகாரிகள்இந்ததீர்மானத்தை எடுத்துள்ளனர்.

தற்போது பிறமாவட்டங்களிலிருந்து வடக்கு -கிழக்கு பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலையில் கடமையாற்றி வருபவர்களுக்கு இக் கடமைப்படி வழங்கப்பட்டு வருவதும், இதனையெதிர்த்து வடக்கு -கிழக்கு வைத்தியர்கள் போர்க்கொடி தூக்கியதும் தெரிந்ததே (உ-8)

# கலைகளை அவற்றுக்குரிய பண்போடு நோக்கி ரசிக்கின்ற தன்மை இன்று மலையேறி விட்டது

### பாரதி திரைப்பட விமர்சனத் திரட்டு நூல் அறிமுகவிழாவில் தெணியான்

(யாழ்ப்பாணம்)

எமதுரசனைகீழ்மட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கலைகளை அவற்றுக்குரிய பண்போடு நோக்கி ரசிக்கின்ற தன்மை இன்று மலையேறி விட்டது. இதற்கு சந்தர்ப்பமும் சூழலும்வாய்ப்பாக அமைந்து விடுகின்றன.

திரைப்படங்களை எடுத்துக் கொண்டால் அவற்றுக்கான தரமான விமர்சனங்கள்வெளி வருவது மிகமிகக் குறைவாகவே உள்ளது.

சலனசித்திரம் அமைப்பினால் வெளியிடப்பட்டபாரதி திரைப்பட விமர்சனத்திரட்டு நூல் அறிமுக விழாவில் விமர்சன உரையாற்றிய எழுத்தாளர் தெணியான் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் வடமராட்சி மத்திய கல்லூரி கலை அரங்கில் இ. சத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

சினிமாக்கான விமர்சனங்கள் நூல் வடிவில் வருவதுமிக அரிதானது. சி.என். அண்ணாத்துரையின ''சொர்க்க 'வாசல்' படம் பற்றிய பார்வை வெளிவந்தது. அறுபதுகளில் 'பராசக்தி' படத்திற்கு தேவரையாளி இந்துக் கல்லூரி நிறுவுநர்ஒருவர்விமர்சன நூலை எழுதினார்.

நீண்ட இடைவெளியின் பின் 'பாரதி' திரைப்படம்பற்றிய இந்நூல் வெளிவந்திருக்கிறது. பாரதியின் வரலாறு படமாக்கப்பட்டதனால் அங்கே சில குறைபாடுகள் இருந்திருக்கலாம். பாரதி பற்றிய பிரமாண்டமான உருவத்தை நாம் வடித்து வைத்திருக்கிறோம்.

சாதியத்திற்கெதிரானதமது எதிர்பார்ப்புகளை காட்டுகின்ற பார்வை அவரில் கூடுதலாக இருந்தது. அந்த நிலையில் பெருமளவுவிமர்சனங்கள் வந்த படமாகவும் நல்லபடமாகவும் 'பாரதியை ஏற்றுக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை மிக்கநிமிர்ந்தகவிஞன் பற்றிய திரைப்படத்தின்விமர்சனங்கள் அடங்கிய இந்நூல் அரிய பல கருத்துக்களைத் தாங்கியுள்ளது என்றார்.

குப்பிளான் ஐ. சண்முகன் விமர்சனஉரையாற்றுகையில், தமிழ்த் திரைப்படங்களில் சினிமாக்கலையை சரியான முறையில் பாரதி படத்தில் இயக்குநர்கையாண்டுள்ளார். பாரதியை அனுதாபத்தனத்தோடு பார்க்கும் இப்படம் பற்றி வெளிவந்துள்ள இந்நூல் அவரின் ஆளுமையை அலசிஆராய்வதோடுபல்வேறுபட்ட அறிஞர்களின் காரசாரமான விவாதங்களையும் வெளிக் கொணர்ந்த சிறப்புக்குரியது என்றார்.

இடங்களில் இந்நூல்ஆய்வுக்கு எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பிலும் சென்னையிலும் குறிப்பாக பாரதி நினைவரங்கில் இந்த விமர்சன அரங்கை நடத்த இருக்கின்றோம்.

அந்த அரங்குகளில் முன்வைக்கப்படும் கருத்துக்களின் தொகுப்புநூலாகஇரண்டாம் பதிப்பு வெளிவரும். திரைப்படம் தொடர்பான விமர்சனங்களை எழுத விளைவோருக்கு இதுஒரு பாடநூலாக இருக்கும் எனஉறுதியாகநம்புகின்றேன் என்றார்.

இன்றைய சூழலில் தரங்கெட்ட சினிமாவால் சீரழிந்து போகும் இளைஞர்களை நல் வழிப்படுத்த சலனசித்திரம் அமைப்பு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது சமுதாயத்தில்எதிர்நீச்சலடித்து திரைப்படம் மூலம் நல்ல விடயங்களை கொடுப்பதன்மூலம் தேசத்தின் உயர்வுக்கு வழிகாட்ட முடியும் என்று தலைமையுரையில் இ. சத்தியலிங்கம் குறிப்பிட்டார்.

எழுத்தாளர் ச. இராகவன் அறிமுகவுரையாற்றுகையில் உலகளாவிய ரீதியில் இந்நூல் அறிமுகமாகியுள்ளது. 31 விமர்சனக் கட்டுரைகளில் 26 இந்திய தளத்தில் இருந்தும் ஏனையவை இலங்கையில் இருந்தும்எழுதப்பட்டுள்ளன. பாரதியைப் பற்றி முழுமையாக அறிய இந்நூல் ஒருவழி காட்டியாக அமையும் என்றார்.

இந்நிகழ்வில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வி. சுகுமாரன் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார். சலனசித்திரம் வடமராட்சி பிரதேசக்கிளை பொதுச்செயலாளர்பொ. சிறிகாந்தராஜா வரவேற்புரை நிகழ்த்தினார். (உ-106)

## துரித தபால்சேவை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பகுதிக்கான தபால் விநியோகத்தில் புதிய நடைமுறை, கடந்த மாதம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் காலை 9 மணிக்கு தபால் சேகரிக்கப்பட்டு பகல் 1 மணிக்கு அவை வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

வெளியிடங்களில் இருந்து கிடைக்கும் தபால்களும் தரம் பிரிக்கப்பட்டு அன்றைய தினமே பகல் 1 மணிக்கு விநியோகிக்கப்படுகின்றன. (உ-250)

### சவுதி இளவரசர் முன்வைத்த

## சமாதானத் திட்டத்தை பிரி. பிரதமர் வரவேற்பு

(லண்டன்)

சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசர் அப்துல்லா, முன்வைத்த மத்தியகிழக்கின் சமாதானத் திட்டத்தைப் பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர் வரவேற்றுள்ளார்.

அத்துடன், ஐ.நா.சபைத் தீர்மானத்தில் இத்திட்டம் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் இவ்வார இறுதியில் அமெரிக்க ஜனாதிபதிபுஷ்ஷுடன் நடத்திய பேச்சுகளின் பின்பிளேயர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பலஸ்தீன பிரதேசங்களில் இருந்து இஸ்ரேல் எவ்வித தாமதமும் இன்றி தனது படையினரை வாபஸ் பெற வேண்டும் என்றும்,

அத்துடன், போரில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் பலஸ்தீனர்களிடையே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வெளிச்சக்தி ஒன்று ஈடுபடவேண்டும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## கஜானா பிராந்திய அணி மண் கவ்வியது

(புதுடில்லி)

சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணிக்கும், கஜானா பிராந்திய கிரிக்கெட் அணிக்குமிடையே ஜோஜ்ரவுணில் நடைபெற்ற 3 நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியுள்ளது.

கஜானா பிராந்திய கிரிக்கெட் அணி முதலாவது இனிங்ஸில் 118 ஓட்டங்களையும்இந்திய அணி முதலாவது இனிங்ஸில் 248 ஓட்டங்களையும் பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் கஜானா அணி சகல விக்கெட்களையும் இழந்து 168 ஓட்டங்களையும் இந்திய அணி 1 விக்கெட் இழப்பிற்கு 39 ஓட்டங்களையும் பெற்றுள்ளது. (உ-9)

## பாகிஸ்தான் தேர்தல் களத்தில் குதிக்கிறார் முன்னாள் பிரதமர்

(லண்டன்)

பாகிஸ்தானில் அடுத்த ஒக்டோபரில் நடைபெற இருக்கும் தேர்தலில் போட்டியிடப் போவதாக முன்னாள் பிரதமர் பெர்ணார்ஜி பூட்டோ கூறியிருக்கிறார்.

பிரிட்டனிலிருக்கும் பெர்ணார்ஜி பூட்டோ தேர்தலுக்காக நாடுதிரும்பப் போவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை, பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் தனது பதவிக் காலத்தை நீடிப்பதற்காக அபிப்பிராய வாக்கெடுப்புநடத்தப் போவதாக அறிவித்திருப்பது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதற்குச்சமமாகுமென திருமதி பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது. (து)

## முன்னைய ஆட்சியில் கல்வித் திணைக்களத்தில் பல்வேறு குளறுபடிகளாம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் கல்வியமைச்சில் நடைபெற்ற சில குறைபாடுகளை கண்டுபிடிக்கமுடியவில்லை

மக்கள் விடுதலை முன்னணியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் இணைந்து செயற்பட்டதனாலேயே இதனை கண்டுபிடிக்க முடியவில்லை என முன்னாள் கல்வியமைச்சர் சுசில்பிறேம ஜயந்த குற்றம் சாட்டியுள்ளார்.

கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியில் கல்வியமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை மோசடி செய்வதில் ஈடுபட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகள் தடுக்கப்பட்டு விட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## சிவில் விமானசேவை தொடர்பாக ஆராய்வு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான சிவில்விமானப் போக்குவரத்துச் சேவைகள் தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் லால் லியனராட்சி தெரிவித்துள்ளார்.

சிவில் விமானசேவையினை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்கான விசேட குழுவொன்று அண்மையில் பலாலி விமான

றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது விமானப்படையினர் இச்சேவையினை நடத்திவந்தாலும், சிவில்நிறுவனங்கள் இன்றும் இப்பணியை ஆரம்பிக்க வில்லை என்பதுடன்,

தற்போது விமானப்படையினர் மேற்கொண்டிருக்கும் இப்பணியினை போலன்றி, சர்வதேச ரீதியில் பயணிகள் விமான சேவையினை நடத்துவதன் மூலமே சிவில் விமான சேவையினை மேற்

# ஆப்கானிஸ்தானில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

தலிபான் ஆட்சியின் போது பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்ட ஹஸானா இன மக்களே இப்புதை குழியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். (செ)

# இஸ்ரேல் படை நடவடிக்கை ஐ. நா. பாதுகாப்புச் சபை அவசரமாககூடி ஆராய்வு

(ஜெருசலேம்)

பலஸ்தீன நகர்களினுள் இஸ்ரேலியப் படைகளின் ஊடுருவல் மற்றும் முற்றுகை தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அவசர கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் மத்திய கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இதற்கமைய யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும், பலஸ்தீன நகரங்களில் ஊடுருவியுள்ள இஸ்ரேலியர்கள் வாபஸ் பெறவேண்டும், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலை சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மத்திய கிழக்குக்கு செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் ஆகிய தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

(உ-8)

குரியது என்றார்.

நூலின்தொகுப்பாசிரியரும் சலனசித்திரம் சம்மேளன பொதுச் செயலாளருமான க. தேவதாசன்உரையாற்றும் போதும்.

இலக்கிய விமர்சனங்கள் முதற்கட்டத்திலேயே சிதைவடைந்து விடுகின்றன. இதனால் சமூகத்திற்குஉரியசாரம் கிடைப்பதில்லை. எனவே, விமர்சனப் பார்வைகளை இரண்டாம் மூன்றாம்கட்டத்திற்கு கொண்டு செல்லவேண்டிய தேவை இருக்கிறது.

தமிழ் ஆராய்ச்சி செய்கின்ற

அண்மையில் பலாலி விமான நிலையத்திற்கு வந்து சென்

விமான சேவையினை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

# போர் நடவடிக்கையை இஸ்ரேல் தீவிரப்படுத்தும்

(இந்தியா)

இஸ்ரேல் படை, மேற்குக் கரையில் தனது இராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்தும் என்று இஸ்ரேல் பிரதமர் ஏரியல் சரோன் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்திற்கு எதிராக இஸ்ரேல் எடுத்துள்ள நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்றும் இராணுவம் திரும்ப அழைக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்க அதிபர் புஷ்கேட்டதற்குப் பதிலளிக்கும் முகமாகஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(உ-5)

# அமெ. தாக்குதல்களை அனைத்து வழிகளிலும் எதிர்கொள்ள தயார்

## கூளுரைக்கிறார் சதாம் ஹூசைன்

(வாஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தின் தாக்குதல்களை தனது நாடு அனைத்து வழிகளிலும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹுசைன் தெரிவித்துள்ளார்.

எம்மிடமுள்ள ஏவுகணைகள், விமானங்கள் மட்டுமன்றி கற்களாலும் கூட அமெரிக்க இராணுவ செயற்பாடுகளை எதிர்கொள்வோம்.

அத்துடன், இறையருளால் அவர்களை தோற்கடிப்போம்.

அபிவிருத்தியடைந்த எதிரிகளுடன் பலஸ்தீனர்கள் வாள்களாலும் தம் உடல்களாலும் எதிர்த்து போராடவில்லையா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். (உ-9)

சிறுபடையான் செல்விடம் சேரின் உறுபடையான் ஊக்கம் அழிந்து விடும்.

- குறள்

# வலம்புரி

## பாசஊற்றின் உடைப்பு

இனப்பிரச்சினை விவகாரத்தில் நேற்றைய நிகழ்வு வரலாற்றில் மிக முக்கியமானதோர் சம்பவமாகும். கடந்த பத்து வருடங்களாக அடைபட்டுக் கிடந்த யாழ்– கண்டி வீதி திறந்து வைக்கப்பட்டமை, மற்றையது விடுதலைப் புலிப் போராளிகள் யாழ்ப்பாணத்திற்குள் வருகை தந்ததாகும்.

கடந்த ஏழு வருடங்களின் பின் யாழ். குடாநாட்டிற்குபுலிகள்வருகை தந்தபோது யாழ்ப்பாண மக்கள் அணி திரண்டு அவர்களை வரவேற்ற நிகழ்வு தமிழ் மக்களுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையேயுள்ள உறவைக் குறித்து நிற்கிறது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு விடுதலைப் புலிகளை வரவேற்ற காட்சியை ஸ்ரீலங்கா இராணுவம் நேரிலே கண்டதெனில் தமிழ் மக்கள் எங்கே நிற்கிறார்கள், அவர்கள் விடுதலைப் புலிகள்பால் எத்துணை அன்பு கொண்டுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொண்டிருக்க முடியும்.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் நேற்றைய தினம் ஓர் அதிசயமான நாள்- வித்தியாசமான, விறுவிறுப்பான நாளும் கூட. எந்த இராணுவத்தைக் கண்டு மக்கள் அஞ்சினரோ அதே இராணுவத்திற்குமுன்னால் விடுதலைப்புலிப்போராளிகளை மக்கள் தூக்கி ஏந்திவந்தார்கள் எனில்அது உயிர் மீது-உடல் மீது-பொருள் மீது கொண்ட பாசங்களெல்லாம் அறுந்து, பிரிந்திருந்த உறவுகள் மீது

# பழவகைகளின் மருத்துவ குணங்களை அறிந்து பயன்படுத்தி நோய்களைக் குணமாக்கலாம்

சமைக்காத இயற்கையில் கிடைக்கும் உணவுப்பொருட்கள் அனைத்தும் இயற்கை உணவெனப்படுகின்றன. இதில் இயற்கையாகக் கிடைக்கும் தானிய வகைகள். காய்கறிகள், கிழங்குகள், பழவகைகள், கீரை வகைகள் போன்றவை அடங்குகின்றன. தீயைப்பயன்படுத்தித் தயாரிக்காத எவ்வகை உணவும் இயற்கை உணவே, நோயுற்றவர்கள் கூட இயற்கை உணவை பெருமளவில் உட்கொண்டு தங்கள் பிணியிலிருந்து விரைவில்விடுபடலாம். அந்த வகையில் பழங்களை உண்டு பலவிதமான நன்மைகளைப் பெறமுடியும். பழங்கள் ஒவ்வொன்றும் எவ்வகையில் மருத்துவக் குணங்களுடன் விளங்குகின்றன என்பதைக்காண்போம்.

### அன்னாசிப்பழம்

சீரணம், மலக் கட்டு, இருமல், வாய்நாற்றம் வாத நோய் என்பவற்றை நீக்கும். உடம்பு, எலும்பு, பல்போன்றவற்றைப் பலப்படுத்தும், மழைகாலத்தில் சாப்பிடுவது நன்றல்ல.

### அப்பிள்பழம்

தாகம், உடல் வறட்சி, வயிற்று அழற்சி, போன்றவற்றை நீக்கும். குடல்புண், பேதி, இரத்த பேதி, தள்ளு மூலம், வயிற்றுப்புண், வாய்ப்புண் போன்றவற்றைக்குணமாக்கும்.

### இலந்தைப்பழம்

வாந்தியை நிறுத்துவதுடன் உடலுக்கு வலுவைக் கொடுக்கும். பசியிலுண்டால் எரிவந்தமுண்டு. பித்த மூர்ச்சை விலகும்.

### எலுமிச்சம்பழம்

இளமையுடன்இருக்கவேண்டுமாயின் அதிகம் எலுமிச்சம் பழம் சாப்பிடவேண்டும். தோலை உலர்த்திப் பொடி செய்து, தலைவலி வரும்போது தடவினால் தலைவலி நிற்கும், இதன் சாற்றில் தேன் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் வாய்ப்புண் ஏற்படாது பித்தக்கோளாறு மறையும் வாந்தியை நிறுத்துவதுடன் களைப்பைப் போக்கும். வாயுக்கோளாறு, வயிற்றுவலி, இருமல், மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு போன்றவைகளைக் குணப்படுத்தும். வாந்தி, மயக்கம், பித்தம், வயிற்றுப் புண், மூலக்குத்து, சிறுநீரகநோய், வாய்நாற்றம், பல் ஆடம், தூக்கமின்மை, கண்ணோய் போன்றவற்றை நீக்கும். காயே சிறந்தது.

## மருத்துவ விளக்கம்

### கொய்யாப்பழம்

வயிற்றுப்புண், மலக்கட்டு, வயிற்றுக்கோளாறு, இருதயப் படபடப்பு, தோல் கோளாறு என்பவற்றை நீக்கும். மூளை, எலும்பு உடல் என்பன பலமடையும்.

### தக்காளிப்பழம்

உடல் வறட்சி, வயிற்றுப்புண், மலச்சிக்கல், சிறுநீர்க் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும்.

### தோடம்பழம்

சூடு, குடல்வறட்சி, தாகம், மலக்கட்டு, கணைச்சூடு, தலைச்சுற்று, சொறி-சிரங்கு, பல்கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும். மேனியை அழகாக்கும் உடலை வளர்ப்பதுடன் கூடிய சக்தியைக் கொடுக்கும்

### திராட்சைப்பழம்

பித்தக்கோளாறு, மலச்சிக்கல், வாதம், உடல் சூடு, கபம், வயிற்றுப்புண், மூலப்புண், நாவரட்சி, சிறுநீர்ச்சூடு, உடம்புவலி, தலைச்சுற்று, களைப்பு, மேகச்சூடு, வாய் நாற்றம், தொண்டைப்புண்' போன்றவற்றைக் குணமாக்கும். கைகால், மூளைபோன்றவை பலமடையும். முகம் அழகுபெறும்.

### நாரத்தம்பழம்

பித்தகுன்மரோகம் நீங்கும் இரைப்பைக்குப் பலம்கொடுப்பதுடன், இரத்தவிருத்தியை உண்டாக்கும். இரத்தத்தைச் சுத்தம் செய்யும்.

### நாவற்பழம்

நீரிழிவு, வயிற்றுப் புண், வாய்ப்புண், வாய்நாற்றம், இருமல், வாய்வு, சிறுநீரகக் கோளாறு போன்றவற்றைக் குணமாக்கும் கடுத்தல், சீதவாதநோய் உள்ள போது விலக்கவேண்டும்.

### பப்பாளிப்பழம்

மலக்கட்டு, கண்ணோய், வாய்நாற்றம், தொண்டைப் புண், வயிற்றுப்புண், பல் கோளாறு, கர்ப்பம் தொடர்பான நோய்கள், என்பவற்றைக் குணமாக்கும். யானைக்கால், வீக்கம் குறையும். உடம்பு, மூளை வலிமை, பெறும். ஆண்மை, பெண்மை நிறையும். நோய் எதிர்ப்புச் சக்தியைஉண்டுபண்ணும். கரு அழியும். இந்தமரத்தின் இலையை அரைத்து ஆனைக்கால் வீக்கத்துக்கு வைத்துக் கட்ட வீக்கம் குறையும்.

### பலாப்பழம்

மூளை வலுவடைவதுடன் அறிவை விருத்திசெய்யும் இதைப் பசு நெய், தேன்என்பவற்றுடன் சேர்த்து உண்டால் களைப்பு, இருமல் என்பவற்றை நீக்கும். அதிகம் உண்பது நல்லதல்ல. இதை உண்டபின் கொட்டையைச் சுட்டெடுத்துச் சாப்பிடுதல் நன்று வாத, கப, பித்ததொந்தரவுகளையும், கரப்பான்பிணிகளையும் உண்டாகும்.

### பாலைப்பழம்

கருங்கரப்பன், கிரந்திநீங்கும். இப்பழவிதையிலிருந்து எண்ணெய் எடுத்து கை, கால்களுக்கு பூசிவர கைகால்களின் கரடு முரடுநீங்கும்.

### புளியம்பழம்

பித்த சுரமயக்கம்மூர்ச்சை குணமாகும். நரை, சன்னி பாதசுரங்கள், மந்த புத்தி உண்டாகும். கறுப்பு நிறத்தையுடைய பழைய புளியைச் சேர்ப்பது சிறந்தது. வாத நோய், பயித்தியம் நீங்கும்.

### பேரீச்சம்பழம்

மலக்கட்டு, களைப்பு, தொண்டைக் கட்டு, பக்க வாதம், போன்றவற்றைத் தணிக்கும். மூளை, எலும்பு, தசை போன்றவற்றை வலுப்படுத்தும். இளைப்பு, மூட்டு வலி, உடம்பு அசதி ஏற்படாமல் தடுக்கும். ஆஸ்துமா நோயாளிக்கு நல்லது. மூல நோயாளிக்கு ஆகாது.

### மங்குஸ்தான்பழம்

குடற்புண், வயிற்றுவலி, வாய்நாற்றம், உடல் வறட்சி, மூலநோய், இரத்தமூலம், மூலப்புண், சூதகவலி, கண் எரிவு, கணச்சூடு, பித்தம், குமட்டல், அன்னதோஷம், இருமல் போன்றவற்றைக் குணமாக்கும். சிறு நீர்ப்பையைச் சுத்தப்படுத்தும்.

### மாதுளம்பழம்

வாய் நாற்றம், வயிற்றுப் புண், அன்னதோஷம், இருமல் மார்புவலி, வயிற்றுக்கனம், தொண்டைக்கட்டு, மூலஎரிவு, நீரிழிவு, ஆஸ்துமா, தொண்டைக்கம்மல், சீதபேதி, வாய்வுப்பிடிப்பு, இரத்தசோகை, பாண்டுரோகம், பெருவயிறு, வாந்தி, மந்தம், நெஞ்சு எரிவு காதடைப்பு, மயக்கம், பித்தம் நீங்கும்.

### மாம்பழம்

உமிழ்நீரைச் சுரக்கச்செய்யும் சீரணத்தை எளிதாக்கும். மலட்டுத்தன்மையைநீக்கும். பசியை உண்டுபண்ணும் சொறி சிரங்கு நீங்கும். ஆண்மை மிகுதியாகும். முக வரட்சியை நீக்கும். இருதயத்திற்கும், மூளைக்கும் பலம் கொடுப்பதுடன் பெண்களின் மாதவிலக்கை ஒழுங்காக்கும். மாம்பழம் உண்டுவந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

### வாழைப்பழம்

வாழைப்பழத்தில் உடல் வளர்ச்சிக்கு முக்கியமாக வேண்டிய கல்சியம், பொஸ்பரஸ், கந்தகம், இரும்புச் சத்து, பொட்டாசியம் ஆகியவை அதிகளவில் இருக்கின்றன. ஏ. பி. சி. விற்றமின்சளும் போதியளவு உண்டு. அதனால் தினசரி சில வாழைப்பழங்களைச் சாப்பிட்டு வந்தால் பக்கவாத நோய் பிற்காலத்தில் ஏற்படாமல் தடுக்கலாம்.

### விளாம்பழம்

பித்தசம்பந்தமான நோய்கட்கும், நீரிழிவு நோய்கட்கும் விளாம்பழம் சாப்பிடுவது நன்று. சர்க்கரை கலந்து சாப்பிட்டால் கல்லீரல் வீக்கத்தைக் குறைக்கும் அடிக்கடி ஏப்பம் வருவது குறையும். நல்ல பசி உண்டாகும். இதன் ஓட்டினை நீராகக் காய்ச்சிக் குடிக்க இருமல் பித்தம் விலகும்.

நன்றி
மருத்துவக்குறிப்புகள்
அறத்தமிழ் ஞானம்

# மேலதிக மின்வெட்டு

மீது கொண்ட பாசங்களெல்லாம் அறுந்து, பிரிந்திருந்த உறவுகள் மீது கொண்ட உச்சமான பாச ஊற்றின் உடைப்பெடுப்பென்றே கூற வேண்டும்.

இதற்குள் இருக்கின்ற அடிப்படைக் காரணம் என்ன என்பதை ஒரு கணம் உற்று நோக்கின் நேற்றைய நல்லூர் கூட்டத்தில் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான பாப்பா ஆற்றிய உரை அதற்கு விடைதருகிறது. தமிழ் மக்களுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேயுள்ள உறவு 'தொப்புழ் உறவு' அதனை யாராலுமே பிரிக்கமுடியாது- அறுக்கமுடியாது என்றார். அது உண்மையும் கூட. அத்தகைய உறவு நிலையே நேற்று வெளிப்பட்டது.

அதனூடே சமாதானம் நிலவ அனைத்து மக்களும் உதவவேண்டும்.

பித்தம், வயிற்றுப் புண், மூலக் வாய்நாற்றம், தொண்டைப்

## தினசரி தியானம்

### பிரம்மச்சரியம்

கட்டக் கழன்று கீழ் நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்டமிருக்க நமனில்லை தானே.

- திருமந்திரம்

பிரமச் சரியத்தால் தெளிந்த கண்ணாடிபோன்று என் மனத்தை நான் மாற்றி விடுவேனானால், பிறகு ஈசா என் காட்சியில் இருப்பவன் நீ ஒருவனே.

காமநுகர்ச்சி மனிதனை விலங்கு நிலையில் வைக்கிறது. அருள் நாட்டமாக அதைமாற்றி விடவேண்டும். அதனால் விந்துதாரணை ஏற்படுகிறது. கற்பு என்பது அதுவே, பதினான்கு வருஷ காலம் மனம், மொழி, மெய்யால் பிரமச்சரியம் கலையாதிருப்பவர்க்குமேதையென்ற புதிய நாடி உண்டாகிறது. அறிவு தெளிதற்கு அது துணையாகிறது.

ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

## மேலதிக மின்வெட்டு மேலும் 1 வாரம் நீடிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த சில தினங்களாக நடைமுறையில் இருந்த மேலதிக மின்வெட்டு மேலும் தொடரும் என யாழ். மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இயந்திரங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் திருத்த வேலைகள், முடிவுறாத காரணத்தினாலேயே மேலும் ஒரு வாரம் மேலதிக மின்வெட்டு அமுலில் இருக்கும் எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## யாழ்ப்பாண நகரம் நேற்றுக் களையிழந்தது

(யாழ்ப்பாணம்)

நேற்றைய தினம் யாழ். நகரம் களையிழந்து காணப்பட்டது.

ஏ-9 பாதை திறப்பு தினமான நேற்று, உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணம் வரும் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை வரவேற்கும் முகமாக சாரிசாரியாக மக்கள் முகமாலைப் பகுதிக்கு விரைந்தனர்.

இதன் காரணமாக, வருடப் பிறப்பு வியாபாரம் நேற்றைய தினம் மந்தகதியில் இடம் பெற்றதுடன், மக்கள் நடமாட்டமும் வழமையைவிட குறைந்திருந்தது.

அத்துடன், வாடகைவாகனங்கள் அனைத்தும் முகமாலைப் பகுதிக்கு விரைந்ததால், வைத்திய சாலையில் இருந்து வீடு செல்வோர் மற்றும் வாடகை வாகனப் பாவனையாளர்கள் பெரும் சிரமத்திற்காளாகியமையை அவதானிக்க முடிந்தது. (உ)



நல்லூரில் நேற்று நடைபெற்ற புலிகளை வரவேற்கும் நிகழ்வில் உரையாற்றிய இளம்பருதி, பெண் புலிப்போராளி, பாப்பா ஆகியோர் உரையாற்றுவதை படங்களில் காணலாம்.

### யாழ் வந்த...

முகமாலைப்பகுதியில் வந்திறங்கிய விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் 18பேரையும் வெள்ளம்போல் குழுமியிருந்த ஜனச்சமுத்திரம் வீரவேங்கைகளே ஈழமண் மீட்புத்தியாகிகளே வருக! வருக! என ஆர்ப்பரித்து கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது வரவேற்பளித்தபோது புலிகளின் முக்கியஸ்தர்கள் கையசைத்து வரவேற்பை ஏற்றுக்கொண்டனர்.

சுமார் ஏழு ஆண்டுகளின் பின் யாழ் குடாநாட்டுக்கு பிரவேசித்த வீர மறவர்களை முகமாலையில் வைத்து யாழ் தளபதி மேஜர் ஜெனரல் லால் வீரசூரியா, 512 வது கட்டளையதிகாரி வடமராட்சிப்பகுதியின் பொறுப்பதிகாரி மற்றும் இராணுவ உயரதிகாரிகளும் நிராயுதபாணிகளாக நின்று வரவேற்றனர்.

முன்னதாக றோசா வாகனத்தில் வந்திறங்கிய விடுதலைப் புலி உறுப்பினர்களின் முக்கியஸ்தர்கள் முகமாலையில் இருந்து வடக்கே மிருசுவில் வரை திரண்டிருந்த ஜனசமுத்திரம் வரை இராணுவத்தினர் சகிதம் அழைத்துவரப்பட்டனர். அப்போது மக்கள் புலிகளின் தளபதிகளான இளம்பருதி (ஆஞ்சநேயர்) பாப்பா ஆகியோரை வாரித் தூக்கி தோளில் சுமந்தனர்.

இதேவேளை கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது யாழ் குடாவின் சகல பாகங்களிலும் இருந்து வந்த பொருந்திரளான மக்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டையும் மீறி பாதையூடாக பிரயாணம் செய்ய முற்பட்டனர் இதனைத்தொடர்ந்து பிரதான வீதியின் குறுக்கே முட்கம்பிகள் போடப்பட்டு பாதைதிறப்பதற்கான ஒத்துழைப்பைதருமாறு ஒலிபெருக்கி மூலம் இராணுவத்தினர் வேண்டுகோள் விடுத்த வண்ணம் இருந்தனர் இதனால் போக்குவரத்துக்கான பாதைதிறப்பு காலதாமதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

முகமாலைப் பகுதியில் திறந்துவிடப்பட்ட பாதையின் திரைச்சீலையில் முதலாவது கஜபாகு ரெஜிமன் வரவேற்கின்றது என்ற வாசகமும், சமாதானம் ஐக்கியத்துக்கான தரைபக்பாதை என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகள் கட்டப்பட்டிருந்தன.

முகமாலைப் பகுதியில் பிரவேசித்த விடுதலைப்புலி முக்கியஸ்தர்களுடன் நோர்வேயின் சர்வதேச கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூரு ஹெவ்டே தலைமையிலான கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் மூன்று பிக்கப் வாகனத்தில் வந்தனர்.

இக்கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுடன் விடுதலைப்புலிகளினால் யாழ்மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்ட கண்காணிப்புக்குழு உறுப்பினர் அருட்தந்தை அரியநாயகம் குருஸும் வந்திருந்தார்.

விடுதலைப் புலிகளை வரவேற்பதற்காகவும் பாதை திறப்பில் கலந்துகொள்ளவும் உலக உணவுத்திட்டத்தைச்சேர்ந்த செல்வி சச்சிதானந்தம், யூ.என்.டீ.பீஐச்சேர்ந்த ஞானசிவபாதசுந்தரம், ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த எஸ் அருணாசலம் ரெலோ விந்தன் வணிகர் கழகத் தலைவர் இ.விஜயசேகரன், பிரம்மஸ்ரீ கேதீஸ்வர சர்மா ஆகியோரும்வந்திருந்தனர் (வ)


வட இலங்கைச் சங்கீத சபையினரின்

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 22 . 07 . 1917



மறைவு 15 . 03 . 2002

அமரர்

சங்கீதபூஷணம் பேரம்பலம் சந்திரசேகரம் M.A

அவர்கள்


### தியாகி திலீபன்...

தளபதி இளம்பருதி நேற்று நல்லூரில் நடைபெற்ற வரவேற்பு விழாவில் தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்த ஜன சமுத்திரத்தின் மத்தியில் நல்லூர் வடக்கு வீதியில் தியாகி திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் விடுதலைப்புலிகளை வரவேற்கும் மாபெரும் வரவேற்பு விழா நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தளபதி இளம்பருதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இன்று உலகமே போற்றும் ஒரு சக்தியாக நாங்கள் விளங்குகின்றோம் என்றால் அதற்கு காரணம் எங்கள்தலைவரின் வளர்ப்பு.

எந்த நம்பிக்கையில் யாழ்.குடாநாட்டை விட்டு கையில் அகப்பட்ட பொருட்களுடன் நீங்கள் அகதியாக வெளியேறிச் சென்றீர்களோ அந்த நம்பிக்கையை நீங்கள் எட்டியுள்ளீர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை (2ம் பக்கம் பார்க்க)

### விடுதலைப் புலிகள்...

- நல்லையா
- பாரதி
- இறையோன்
- தயாளன்
- செம்மணன்
- பூவண்ணன்
- கலைஞன்

பெண்போராளிகள்

- தமிழ்விழி
- தமிழ்நிலா

(இ.10)

## பாதைதிறக்கும் நிகழ்வில் அமைச்சர்கள் பங்குபற்றவில்லை

(தென்மராட்சி நிருபர்)

ஏ.9கண்டிவீதி திறப்பு விழாவில் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், காணி அமைச்சர் ர்ராஜித சேனாரட்ன ஆகிய இருவரும் கலந்து கொள்ளவில்லை.

ஏ.9கண்டி வீதி திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்றுக் காலை இரண்டு அமைச்சர்களும் முகமாலைப்பகுதி நோக்கி சென்றபோது அவர்கள் இருவரும் எழுதுமட்டுவாள் பகுதியுடன் நின்று விட்டு பாதை திறப்பு விழாவில் கலந்து கொள்ளாது திரும்பினர்.

பிரதமர் ரணிலின் விசேட அறிவுறுத்தலை அடுத்து இரு அமைச்சர்களும் திறப்பு விழாவில் கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மாவீரர் இல்லங்களில் இன்று வீர அஞ்சலி

### புலிகளின் தளபதிகள் கலந்துகொள்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்கு வருகை தந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் இன்று குடாநாட்டில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் மாவீரர் நினைவுத் தூபிகளுக்கும் சென்று அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

மண்மீட்புப் போரில் உயிர் நீத்த வீர மறவர்களுக்கு வீர மரியாதையும் வீர அஞ்சலியும் செலுத்தும் நிகழ்வு இன்று காலை 9மணிக்கு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இங்கு அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளும் புலிகளின் பிரமுகர்கள் அங்கிருந்து வடமராட்சிக்கு சென்று அங்குள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெறும் அஞ்சலி நிகழ்விலும் கலந்து கொள்வர்.

அதனைத் தொடர்ந்து தீருவில் மாவீரர் நினைவுத் தூபி, பருத்தித்துறை ரஞ்சன் பூங்கா நினைவாலயம் மற்றும் நெல்லியடியில் உள்ள கரும்புலிகள் நினைவாலயம் ஆகியவற்றுக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் சென்று வீர மரியாதையும் வீர அஞ்சலியும் செலுத்தவுள்ளனர்.

இதேவேளை குடாநாட்டில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் நினைவுத் தூபி அமைந்துள்ள பிரதேசங்களை குடாநாட்டு மக்கள் அண்மையில் சிரமதானம் மூலம் புனிதப்படுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)


## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் மூக்குக் கண்ணாடி விற்பனை நிறுவனத்திற்கு ஆங்கில அறிவுள்ள பெண் லிகிதர் தேவை. வயது 40–50க்கு இடைப்பட்டவர். சுன்னாகத்திற்கு அருகாமையில் உள்ளவர் விரும்பத்தக்கது. உங்கள் விண்ணப்பங்களை 15–04–2002ற்கு முன்னர் கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

சேது. விபுலானந்தா
207 கே.கே.எஸ் றோட்
சுன்னாகம்

அவர்கள்

வட இலங்கைச் சங்கீத சபையின் நீண்டகால உபதலைவரும் வட பிரதேச இந்துப் பேரவையின் ஸ்தாபகத் தலைவரும் ஆகிய சந்திரசேகரம் அவர்கள் காலமான செய்திகேட்டு துயரடைகிறோம் அன்னார் சைவசமய மேம்பாட்டிற்கும் இசைத்துறை வளர்ச்சிக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன இவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு வட இலங்கை சங்கீத சபையினராகிய நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

அத்துடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*தலைவர்* *செயலாளர்*

வட இலங்கைச் சங்கீத சபையினர்,
கல்வித் திணைக்களம்,
செம்மணிவீதி

(C/3931)

மில்க்வைற்

கேட்டு வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
மில்க்வைற் சோப்

மில்க்வைற் சோப்
இண்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க

# பொதுக்கூட்டம்

இடம்:- புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.

காலம்:- இன்று (09.04.2002) 8.00A.M

விடயம்:- மீள்பதிவும் தொழில் அமைச்சின் விண்ணப்பப் படிவமும் வழங்கப்படும்

அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தலைவர்* (4954) *செயலாளர்*

## இலங்கை மின்சார சபை — யாழ்.பிரதேச அலுவலகம்

## மின் பாவனையாளர்களுக்கான

# அறிவித்தல்

யாழ். குடாநாட்டிற்கு 20 மெகாவாட் மின்சாரம் தேவை. இலங்கை மின்சார சபைக்கு மின்சாரம் வழங்கும் கூல் ஏயார் நிறுவனம் 18 மெகாவாட் மின்சாரம் வழங்க ஒப்புக்கொண்டிருந்தது. அனால் தற்போது அவர்களது சில ஜெனரேட்டர்கள் பழுதடைந்துள்ளமை யால் பகல் 04 மெகாவாட் மின்சாரமும் இரவு 05 மெகாவாட் மின் சாரமும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்க முடியும் என அறிவித்துள்ளார்கள். இந் நிலையில் மறுஅறிவித்தல் வரை இலங்கை மின்சாரசபை இந்த மின்சாரத்தை சுழற்சி முறையில் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை வழங்கும் என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகிறேன்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காகமனம் வருந்துகிறேன்.

*பிரதேச மின்பொறியியலாளர்,*
*இலங்கை மின்சாரசபை,*
*யாழ். பிரதேச அலுவலகம்,*
*சுன்னாகம்.*
*08. 04. 2002*

"சூழல் மற்றும் அபிவிருத்தி
வேலைகளுக்குக் கைகொடுக்கும்
"இலங்கை மின்சாரசபை"

(C/3933)

பற்களின் வெண்மைக்கும்,
பாதுகாப்பிற்கும்
அன்னு
பற்பொடி



அன்னு தொழிலகம், இணுவில்.

படிவங்கள்

பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் படிவங்கள் தரம் 10,11உம் ஏனைய தரங்களுக்கும்பெற்றுக்கொள்ளலாம்

கணேசன் கொமினிக்கேசன்
தொ. பேசி. இ:-2585
கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி

அமைதியான சூழலில்
சித்திரைப்புத்தாண்டிற்கான புடைவைத்
தினுசுகளை தெரிவு செய்திட நாடுங்கள்



69A நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்
(C/3934

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்ட